நெசவாளர்களில் பலர் இப்பொழுது வேலையில்லாமல் இருக்கும் இந்த நேரத்தில் இதை உற்சாகப்படுத்த, அமெரிக்க நாட்டோடு தொடர்பு கொண்டு இந்த ப்ளீடிங் மெட்ருசை இன்னும் அதிகமாக உற்பத்தி செய்யவும், அந்நிய செலாவணியைப் பெறவும் நம்முடைய அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதைத்தான் இப்பொழுது சொன்னேன். 15½ இலட்சம் ரூபாய்க்கு வந்திருக்கிறது.

Silk Farms at Kolatti and Masinagudi

* 48 Q.—THIRU A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Industries be pleased to state the amount of money spent on large scale silk farms at Kolatti and Masinagudi so far and the income derived from the same ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கொலட்டியிலுள்ள பெரிய அளவு பட்டுப் பண்ணையில் 1966-67 முதல் 1971-72 வரை ரூ. 14,80,271-ம் மாசினகுடியிலுள்ள பட்டுப்பண்ணையில் 1967-68 முதல் 1971-72 வரை ரூ. 2,90,528.89-ம் செலவிடப்பட்டுள்ளது மேலே குறிப்பிடப்பட்ட காலங்களில் கொலட்டி பட்டுப் பண்ணையில் ரூ. 2,95,601 மாசினகுடி பண்ணையில் ரூ. 24,109-ம் வருமானமாக வந்தது.

THIRU B. VENKATASWAMY : Sir, from the answer given by the Hon. Minister for Industries I understand the Kolatti Silk Farm is one of the largest Silk Farms in the World. But the income that is derived from the farm is very low when compared to the investment that has been made. May I know from the Hon. Minister when we are going to recoupe this amount ? Also, the wage paid to the workers is only one or two rupees per day, even after the minimum wages Act has been passed. Will the Government take into consideration all these things and increase the wages to the coolies there?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இதுபோன்ற பண்ணைகள் உருவாக்கப்படுவது, இந்தச் செடிகள் வளர்க்கப்பட்டு, கக்கூன்ஸ் வளர்க்கப்பட்டு பட்டு உற்பத்தியாகவேண்டுமென்ற நேரத்தில், இப்பொழுது வளமாக வந்துள்ளது. இனிமேல் வருவாய் தொடங்கும்.

1974 சனவரி 21]

திரு. கு. அ. பொம்மன் : தலைவரவர்களே, இந்த மாசினகுடி பட்டு திட்டத்தை விரிவு செய்ய அரசுக்கு ஏதாவது உத்தேச முண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பொதுவாக எந்தெந்த இடங்களிலே இந்த பட்டு வளர்ச்சிக்கு உதவி செய்ய முடியுமோ அதைத் திட்டமிட்டு செயல்பட வேண்டுமென்று முடிவு செய்திருக்கிறோம். அதற்காக சில்க் போர்டு மத்திய அரசின் உதவியோடு பணம் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். பணம் கிடைத்த வுடன் எந்தெந்த இடங்களில் வளர்க்க முடியுமோ அதற்கு முயற்சிக்கலாம்.

THIRU B. VENKATASWAMY : May I know from the Hon. Minister whether any large-scale schemes have been sent to the Government of India through the Government of Tamil Nadu ? If so, what are the schemes that have been sent to the Government of India and how many of them have been sanctioned so far?

மாண்புமிகு. திரு. செ. மாதவன் : இந்த விவரம் இப்பொழுது என்னிடத்தில் இல்லை. நாம் சுமார் 6 கோடி ரூபாய்க்குத் திட்டமிட்டு தமிழகம் முழுவதும் எங்கெங்கு பட்டு வளர்ச்சியை ஏற்படுத்தலாம் என்று இருக்கிறோம். அதற்கு கூட்டுறவுத் துறையில் முதலிடம் கொடுக்க வேண்டும், அதற்கு உதவித் தொகை வழங்க வேண்டுமென்று சில்க் போர்டுக்கு அனுமதி கேட்டு எழுதியிருக்கிறோம்.

திரு. ஏ. எம். இராஜா : தலைவரவர்களே, இந்த பட்டு உற்பத்தியிலே, கோவை தாலுக்கா, பல்லடம் தாலுக்காக்களில் பட்டு உற்பத்தி செய்ய அங்குள்ள விவசாயிகள் முன் வந்திருக்கிறார்கள். அங்கு உற்பத்தியாகும் பட்டு சிறந்தது என்று சொல்லப் படுகிறது. ஆகவே, அவர்களுக்கு ஊக்கம் தரும் வகையில் பட்டு உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு ஏதாவது புது முயற்சிகளை மேற்கொள்வதற்கு அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாண்புமிகு அங்கத்தினர் கூறியது உண்மை. அந்தப் பகுதியிலே நல்லமுறையிலே அந்தச் செடிவளரும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய அந்தத் திட்டத்திலே அந்தப் பகுதியும் இணைக்கப்படும்.

திரு. ஏ. சி. நரசிம்மன் : தலைவரவர்களே, நிறைய பட்டு உற்பத்தியாளர்கள் இருக்கும் பகுதி ஆரணி தாலுக்கா. அந்த தாலுக்காவிலே பட்டை உற்பத்தி செய்ய வேண்டுமென்று முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக நிலம் வேண்டு மென்று கூட்டுறவு சொசைட்டி மூலம் கேட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு இன்னும் அது வழங்கப்படவில்லை. அது விரைவில் வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இதைப்போல ஆரணி, காஞ்சீபுரம், கும்பகோணம் போன்ற பட்டு உற்பத்தியிருக்கும் பகுதிகளில் இதுபோன்ற ஆர்வம் ஏற்பட்டிருக்கிறது. அங்கத்தினர் சொன்னது போல் ஆரணியிலும் அந்த ஆர்வம் ஏற்பட்டிருக் கிறது. அங்கத்தினர் அவர்கள் முயற்சித்து கூட்டுறவுச் சங்கமே அந்தக் கூட்டுறவுச் சங்கத்திற்கு நிலம் கொடுக்கும்படி தயார் செய்துவிட்டால் உதவித் தொகை கொடுத்து அந்த வளர்ச்சியை அங்கு ஏற்படுத்த முடியும்.

Survey on availability of coal

*50 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any survey about the availability of **coal in** this State has been conducted recently; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

வழக்குரைஞர்கள் கட்டண வீதங்களை உயர்த்தல்

*51 வினா—**திரு. ச. சங்குமுத்து தேவர் :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) கோர்ட்டு வழக்குகளில், வக்கீல்களுக்கு கொடுக்கப் படும் செலவுத் தொகையில் சேரும் பீஸை உயர்த்த வேண்டும் என்று வக்கீல்கள் சங்கத்திலிருந்து மனுக்கள் வந்துள்ளனவா ?

(இ) ஆம் எனில், அவைகளின் மீது எடுக்கப்பட்ட முடிவு என்ன ?